செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 274 நாள் : 11/5/17

# பத்திரிக்கை செய்தி

## வேலூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவகாப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆதார் எண்ணை இணைக்கும் பணி.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட (**CMCHIS Website**) தரவு தளத்தில் ஆதார் எண்ணை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 8,17,052 முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகளில் சுமார் 4,82,403 காப்பீடு அட்டைகள் குடும்ப அட்டை விவரத்தில் உள்ள ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 3,34,649 காப்பீடு அட்டைகளை ஆதார் எண்களுடன் இணைக்கும் பணி வேலூர் மாவட்டத்தில் கிராமம் தோறும் தொடங்கி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

ஆதார் எண்களை காப்பீட்டு அட்டையுடன் இணைக்கும் பணியானது அணைக்கட்டு, குடியாத்தம், காட்பாடி, வேலூர், வாலாஜா, ஆற்காடு, ஆகிய தாலுக்காக்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திலோ அல்லது நியாயவிலைக்கடைகளிலோ முகாம் அமைத்து ஆதார் எண்களை இணைக்கும் பணி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள தாலுக்காக்களில் இப்பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இப்பணியின் போது பொதுமக்கள் தங்களிடம் உள்ள மருத்துவ காப்பீட்டுத் திட்ட அட்டையுடன் தங்களின் ஆதார் எண்ணை இணைக்காதவர்கள் மேற்படி சிறப்பு முகாமில் இணைத்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- திரு. சி. அ. ராமன்
மாவட்ட ஆட்சியர்
வேலூர்.

/ உத்திரவு படி /

9/5/17
மாவட்ட ஆட்சியருக்காக
வேலூர்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்.
வேலூர்.

11/5/17
செ.ம.தொ.அ.
வேலூர் - 9.

9/5/17